සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/SW/14/19/01/Circular
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........
දිනය / திகதி / Date: 2020.01.20

சகல மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்

தலைமைக் காரியாலயத்தின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்,
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்

**<u>சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டம் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்</u>**

மேற்படி தலைப்பின் கீழ் தங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள DSD/HO/SW/14/16 நிவாரண சுற்றறிக்கை என்ற இலக்கத்தினையுடைய 2019.02.28ம் திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பில்.

02. இக் கடிதத்தின் 02 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் புதிய பயனாளிகளின் பொருட்டு நிவாரணங்களை வழங்குவதற்கு பிரதேச செயலகங்களிடமிருந்து அகற்றப்பட்ட அதிகாரங்கள் 2020.02.01ம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் பிரகாரம் மீள வழங்கப்படுகின்றதுடன் புதிய சமுர்த்திப் பயனாளிகளை தெரிவு செய்யும் போது கீழ் குறிப்பிடப்படும் முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

1. 2019.04.05ம் திகதியின் 2117/55 என்ற இலக்கத்தினையுடைய நலன்புரிக் கொடுப்பனவுகளை செலுத்தும் பொருட்டு குறைந்த வறுமானம் பெறும் குடும்பங்களை இனங்காணும் முறைகள் உள்ளடங்கியுள்ள விசேட வர்த்தமானியில் அடங்கியுள்ள எடுகோள்களின் பிரகாரம் செயற்படுதல்.

2. சமுர்த்தி நிவாரணம் பெறுவோரை தெரிவு செய்யும் போது பிரிவு மட்டத்தில் குடும்பங்களை இனங்காணும் பணிகள் கிழுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட குழுவின் மூலம் மேற்கொள்ளல்.

   - பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.
   - பிரிவுப் பொறுப்பு கிராம உத்தியோகத்தர்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

- பிரிவுப் பொறுப்பு பொருளாதார, அபிவிருத்தி உத்தியோகத்தர்.
- பிரிவின் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்

3. மேலே குறிப்பிட்ட பிரகாரம் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி நலன் உதவிகளைப் பெற தகுதியான குடும்பங்களின் பொருட்டு தலைமையக முகாமையாளர்கள் மற்றும் தலைமையக முகாமையாளர்களால் சிபாரிசுகள் வழங்கப்பட்ட பின்னர் பிரதேச செயலாளரால் அங்கீகரித்தல்.

4. அவ்வாறு நலனுதவிகளைப் பெறுவதற்குறியதான குடும்பங்கள் என அங்கீகரிக்கப்பட்ட குடும்பங்களை உள்ளடக்கி முன்னுரிமைப்பட்டியல் ஒன்றினை தயாரித்தல்.

5. 2019 ஆகஸ்ட் மாதத்திற்குறிய நலனுதவிப் பெறுமதியினைத் தாண்டாதவாறு முன்னுரிமைப் பட்டியலிற்கேற்ப பிரதேச செயலக மட்டத்தில் மாதாந்தம் சீராக்கங்களை மேற்கொண்டு நலனுதவிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

03. மேற்படி முறைகளைப் பின்பற்றும் போது உருவாகும் பிரச்சினைகளையுடைய சந்தர்ப்பங்களில் குறித்த விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு எனக்கு சமர்ப்பித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04. இவை தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவைப்படின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிப் பிரிவின் பணிப்பாளரை 0112 864398 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

நிமல் கொட்டவலகெதர
பதில் பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள் :-

1) செயலாளர், (நிதி அமைச்சு) - த.கூ.க. பொருட்டு
2) செயலாளர், (மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு) - த.கூ.க. பொருட்டு
3) பிரதம கணக்காளர், (சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்) - த.கூ.க. பொருட்டு
4) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் (சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு

Translated By: - M.M.M. Jawhar (Translator)